**தொழில் நுட்பக் கல்வித் துறை, தமிழ் நாடு**
**தேர்வு வாரியம், சென்னை – 600 025**

**புதிய வணிகவியல் பயிலகங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்**

**அறிவிக்கை**

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி –யில் 2021 ம் ஆண்டிற்கு புதியதாக அரசு அங்கீகாரம் பெற விரும்பும் வணிகவியல் பயிலகங்களுக்கு தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், தேர்வு வாரிய இணையதளத்திலிருந்து (www.tndte.gov.in/site) 19.07.2021 முதல் 18.08.2021 வரை (மாலை 5:30 வரை) விண்ணப்பப்படிவம் மற்றும் விளக்கவுரையை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1 | விண்ணப்பப்படிவம் இணையதளம் மூலம் கிடைக்க பெறும் நாட்கள் | 19.07.2021 முதல் 18.08.2021 வரை |
| 2 | விண்ணப்பப் படிவத்தின் விலை<br>பதிவு கட்டணம்<br>(வங்கி வரைவோலையாக) மொத்தம் | ரூ.**30**/-<br>ரூ. **625**/-<br>ரூ.655/- (for the Applications Downloaded from the Website) |
| 3 | வங்கி வரைவோலை எடுக்க வேண்டிய முகவரி | The Additional Director of Technical Education (Exams) Chennai – 600 025. Payable at Chennai |
| 4 | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (இரண்டு பிரதிகளில்) உரிய கட்டணத்துடன் இயக்ககத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | **18 .08.2021 (மாலை 5:45 வரை)** |
| 5 | இணையதளம்<br>தொலைபேசி எண். | http://www.tndte.gov.in/site<br>044- 22351018 Ext - 356 / 358 |

சென்னை: 600 025

நாள்: **12.07.2021**

தலைவர்,
தேர்வு வாரியம்

தேர்வு வாரியம்

# தொழில் நுட்பக் கல்வித் துறை

**சென்னை – 600 025.**

வணிகக் கல்விப் பயிலகங்கள் அங்கீகாரத்திற்கு விண்ணப்பித்துக் கொள்வது சம்மந்தப்பட்ட விளக்கவுரை

*****

வணிகக் கல்விப் பயிலகங்களுக்கு அங்கீகாரம் வேண்டுவோர், கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி பயிலகம் இயங்கினால் மட்டுமே அங்கீகாரத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும். அவற்றில் ஏதாவதொரு நிபந்தனையோ அல்லது நிபந்தனைகளோ பின்பற்றாத பயிலகங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது.

அங்கீகாரம் பெற விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகள்:

**1. கட்டடம்**

வணிகக் கல்விப் பயிலகக் கட்டடம் நல்ல உறுதியானதாகவும், காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ளதாகவும் அமைந்திருத்தல் வேண்டும். சுகாதார வசதிகள் இருத்தல் வேண்டும். சுருக்கெழுத்து வணிகவியல் பாடங்கள் நடத்துவதற்கு தனித்தனி அறைகள் இருத்தல் வேண்டும்.

**2. தளவாடச் சாமான்கள்:**

வணிகக் கல்விப் பயிலகங்கள் நடத்துவதற்குப் போதுமான மேசை, நாற்காலிகள் இருத்தல் வேண்டும்.

**3. சாதனப் பொருட்கள்:**

குறைந்தபட்சம் ஒரு பயிலகத்தில் இருக்க வேண்டிய சாதனப் பொருட்கள் கீழ்வருமாறு:

(1) ஐந்து ஆங்கில தட்டச்சுப் பொறிகள்.
(2) ஒரு தமிழ் தட்டச்சுப் பொறி (தமிழ்த் தட்டச்சுக்கு அங்கீகாரம் வேண்டப்பட்டால்).
(3) இரண்டு கணிப் பொறிகள்

**4. கற்பிக்கப் பயன்படும் சாதனங்கள்:**

கரும்பலகை, படிவங்களும் வடிவங்களும், தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் பாடங்கள் சம்பந்தமான புத்தகங்கள் மற்றும் குறிப்புகள் போன்றவைகள் அடங்கிய ஒரு சிறு நூலகம்.

**5. ஆசிரியர்கள்:**

தொழிற்கல்வி பாடங்களில் முதுநிலை தேர்ச்சி பெற்றவர்தான் ஆசிரியராக பணிபுரிதல் வேண்டும். டி.டி.சி. தேர்ச்சி பெற்ற முழு நேர ஆசிரியர் பணியாற்ற வேண்டும். ஒரே அங்கீகாரம் பெற்ற பயிலகத்தில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணிபுரிந்து வரும் ஆசிரியர் இருப்பின், அப்பயிலகத்தில் டி.டி.சி. தேர்ச்சி பெற்றவர் பணிபுரிய வேண்டும் என்னும் விதிமுறை வலியுறுத்தப்பட மாட்டாது.

எல்லாத் தொழில் நுட்பப் பாடங்களான தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல் ஆகிய பாடங்களில் முதுநிலைக் கல்வித் தகுதி பெற்றவர்கள் ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டிருந்தால் மட்டும் அப்பாடங்களின் இளநிலைக்கு மட்டுமோ அல்லது இளநிலைக்கும் முதுநிலைக்குமோ அங்கீகாரம் கேட்கலாம். எனினும் சுருக்கெழுத்து ஆங்கிலம் இடைநிலை தகுதிபெற்ற ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டிருந்தால் சுருக்கெழுத்து ஆங்கிலம் இளநிலைக்கு அங்கீகாரம் கேட்கலாம். B.Com.,தேர்ச்சி பெற்றவர்கள் இருப்பின் கணக்கியல் இளநிலைக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கப்படும்.

பணிபுரியும் ஆசிரியர்கள் தாம் தகுதி பெற்றுள்ள பாடங்களில் மட்டும் பயிற்சி அளிக்க வேண்டும். போதிய கல்வித்தகுதி பெறாத பாடங்களில் பயிற்சி அளித்தல் கூடாது.

உரிமையாளரோ, முதல்வரோ, ஆசிரியர்களில் எவரேனுமோ அரசு/அரசு போன்ற உள்ளாட்சி மன்ற அலுவலகத்தில் பணிபுரிவதாயின், சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் சான்றொப்பம் பெறப்பட்ட அனுமதி கடிதத்தின் உண்மை நகல்(கள்) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் சான்றொப்பம் பெறப்பட்டு, விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். எவ்வித காலக் கெடுவின்றி சில ஆண்டுகளுக்கு முன்னதாக பெறப்பட்டுள்ள அனுமதிக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.ஏனெனில், காலக் கெடுவின்றி கொடுக்கப்பட்டுள்ள அனுமதிக் கடிதம் உடையவர்களின் அனுமதி நடப்பு ஆண்டிற்கு மாற்றப்படலாம் அல்லது வேறு பதவி உயர்வு பெற்றோ, மற்ற துறைகளுக்கு மாற்றப்பட்டோ இருக்கலாம். ஆகவே, நடப்பு ஆண்டிற்கு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும் நிரந்தரமாக அளிக்கப்பட்டுள்ள அனுமதி கடிதங்களைத் தவறுதலாகப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக அரசு அப்போது அவ்வாறான நிரந்தர அனுமதிக் கடிதங்கள் வழங்குவதை விடுத்து ஓராண்டு காலத்திற்கான அனுமதி வழங்குவதை வற்புறுத்தி வழங்குகிறது. ஆகவே ஓராண்டு காலத்திற்கு முன்னதாகவே வழங்கப்பட்ட நிரந்தர அனுமதிக் கடிதம் உடையவராயிருப்பின் நடப்பு ஆண்டிற்கான புதிதாக அனுமதி பெற அறிவுரை வழங்கி அவ்வாறு பெறப்படும் அக்கடிதத்தின்உண்மை நகலை இணைத்தல் வேண்டும். அவ்வாறின்றி நிரந்தரமாக அளிக்கப்பட்டுள்ள அனுமதி கடிதத்தின் நகல் இணைக்கப்படின் அல்லது செல்லுபடியாகாத அனுமதிக் கடிதத்தின் நகல் இணைக்கப்படின் அவ்விண்ணப்பப் படிவம் அங்கீகாரம் அளிக்கும் பொருட்டு மேல் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

பயிலகத்தில் முழுநேர டி.டி.சி. ஆசிரியர் இருத்தல் வேண்டும் என்பது அவசியம்.மேலும், எக்காரணத்தைக் கொண்டும் இந்த டி.டி.சி. ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட பயிலகங்களில் பணியாற்ற அனுமதிக்க இயலாது. நிலைய வேலை நேரம் முழுவதும் தகுதி பெற்ற ஆசிரியர்கள் நிலையத்திலிருக்கும்படியாக வேலை நேர ஒதுக்கீடு இருத்தல் வேண்டும். கால அட்டவணைப்படி ஆசிரியர்கள் நிலையத்திலிருத்தல் வேண்டும். ஆய்வின்போது விடுப்புக் கடிதம் எதுவுமின்றி கால அட்டவணைப்படி குறிப்பிட்ட ஆசிரியர் யாரேனும் இல்லாவிடின் அப்பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர் இல்லை எனக் கருதி அவரால் மட்டும் பயிற்சி அளிக்கப்படும் பாடங்களுக்கு அங்கீகாரம் விலக்கப்படும்.

இவ்விளக்கவுரையின் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது போல் படிவம் ‘அ’ சான்றிதழ் ஆசிரியர் ஒவ்வொருவரிடமிருந்தும் பெறப்பட்டு விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். அச்சான்றிதழில் பொருந்தாத வார்த்தைகள் அடிக்கப்பட்டு உள்ளனவா என்று பார்த்த பின்னரே விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்பட வேண்டும். மேற்படி சான்றிதழ்கள் இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப் படிவம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

புதுப்பித்தற்குரிய அங்கீகார விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே ஆசிரியர்கள் சென்ற ஆண்டு வேலையில் தொடர்வதாயின் அவருடைய / அவர்களுடைய கல்வித் தகுதியை நிரூபிக்க கல்விச் சான்றிதழ்களின் உண்மை நகல் (கள்) அனுப்ப தேவையில்லை. ஆயினும் நிரூபிக்க சான்றிதழ்களின் உண்மை நகல்களை அனுப்ப வேண்டும்.

முதல் தடவையாக அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கப்படுமாயின் அந்நிலையத்தில் பணி புரியும் எல்லோருடைய கல்வித் தகுதிச் சான்றிதழ்களின் உண்மை நகல்களை இணைத்தல் வேண்டும். இந்நிலையத்தில் பணிபுரிவோர் ஏற்கனவே வேறு நிலையங்களில் பணிபுரிந்தவராயிருந்து அவரது கல்வித் தகுதிச் சான்றிதழ்கள் அந்நிலைய அங்கீகார விண்ணப்பத்துடன் ஏற்கனவே சென்ற ஆண்டுகளில் அனுப்பப்பட்டிருப்பினும் இவ்வாண்டு இந்நிலைய அங்கீகார விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். உரிமையாளர் ஆசிரியராக இருப்பின் அவரது பெயர் ஆசிரியர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படாவிட்டால், பிற்காலத்தில் அவரது அனுபவம் குறித்து கேள்வி எழும்போது அவரது கடிதம் பரிசீலிக்கப்படமாட்டாது. உரிமையாளர் மட்டுமே ஆசிரியராக இருப்பினும், வருகைப் பதிவேடு பராமரித்து அவர் கையொப்பம் இடப்பட வேண்டும்.

### 6. ஆசிரியர் மாற்றம்:

வணிகவியல் பயிலகத்தில், உரிமையாளர் அதில் பணிபுரியும் ஆசிரியர் முதலியவர்களில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும், அதனை உடனுக்குடன் இவ்வியக்ககத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

புதிய ஆசிரியர் நியமிக்கப்பட்டால், அவருடைய தொழில் நுட்பக் கல்விச் சான்றிதழ் நகல்கள் மற்றும் ‘அ’ படிவம் கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும். அவர்களது பணி நேரம் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

ஆசிரியர் விடுப்பில் சென்றால், விடுப்பு அனுமதி பெற்றிருப்பதோடு பதிவேட்டிலும் பதிய வேண்டும்.

### 7. பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள்:

மாணவர்கள் சேர்க்கைப் பதிவேடு, வருகைப் பதிவேடு, மாதாந்திர கட்டணம் வசூலிக்கும் பதிவேடு, அதற்குறிய ரசீது புத்தகம், ஸ்டைபண்டு/ஸ்காலர்ஷிப் தொடர்பான பதிவேடுகள், ஆசிரியர் வருகைப் பதிவேடு, சம்பளம் வழங்கும் பதிவேடு, இருப்பு பொருட்கள் பதிவேடு.

மேலே கூறப்பட்டுள்ள அனைத்துப் பதிவேடுகளும் முறையாக பதிவு செய்யப்படுதல் மட்டுமல்லாது தணிக்கையின்போது அவை அனைத்தும் பார்வைக்காக கொடுக்கப்பட வேண்டும். சரிவர பராமரிக்கப்படாத பதிவேடுகள் ஆய்வின் போது காணப்பட்டால் அங்கீகாரம் அளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பப் படிவத்தில் கூறப்பட்டுள்ள பதிவேடுகள் இரகசியத் தன்மை வாய்ந்தவையல்ல. ஆகவே உரிமையாளரோ, முதல்வரோ இல்லாதபோதும் எந்நேரத்திலும் எந்த தணிக்கை அலுவலரின் பார்வைக்கும் அவை கிடைக்கும்படியாக நிலையத்தில் வைக்கப்படல் வேண்டும்.

## 8. தட்டச்சுப் பொறிகள்:

விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ளது போல் நிலையத்திலிருக்கும் தட்டச்சுப் பொறிகளின் மாதிரி தட்டச்சு தனித்தாளில் ஒரு பிரதி எடுக்கப்பட்டு தேர்வு வாரியத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். நல்ல நிலைமைகளில் இல்லாத தட்டச்சுப் பொறிகளின் பேரில் ஏற்பு அளிக்க இயலாது.

தட்டச்சுப் பொறிகளின் எண்ணிக்கை கூடுதல் அல்லது குறைவு பற்றி உடனுக்குடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். அது விவரம் உரிமையாளரால் உடனுக்குடன் தெரிவிக்கப்படாத காலத்துக்குப் பின்னர் இவ்வியக்கத்தால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு உரிமையாளரால் அளிக்கப்படும் விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. புதியதாக தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டால், வரிசை எண், தயாரிப்பு மற்றும் அதன் ''மாதிரி'' எழுத்துக்கள் தட்டச்சு செய்து அனுப்பப்பட வேண்டும்.

## 9. பாடங்களுக்கு ஏற்பளிப்பு:

அங்கீகார விண்ணப்பத்தில் வேண்டப்பட்டுள்ள பாடங்களுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படும். அங்கீகார விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர் மேற்கொண்டு கூடுதல் பாடங்களுக்கு அங்கீகாரம் கேட்டால், அவர்களது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏற்பளிப்பு ஆணையில் குறிப்பிட்டுள்ள பாடங்களைத் தவிர்த்து இதர பாடங்களுக்கு பயிற்சி அளிக்கவோ கற்பிக்கவோ கூடாது. நிரந்தர அங்கீகாரம் பெற்ற பயிலகங்கள் கூடுதல் பாடங்களுக்கு அங்கீகாரம் வேண்டுமானால் ஒவ்வோரு ஆண்டும் புதுப்பித்தலுக்கான விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

## 10. இடைவெளி வரைமுறை:

புதிதாகத் துவக்கப்படும் வணிகக் கல்விப் பயிலகங்கள், ஏற்கனவே, அங்கீகாரம் பெற்று இயங்கி வரும் பயிலகங்களிலிருந்து 1/4 (கால்) கி.மீ. இடைவெளிக்குள் துவக்கப்பட்டால், அப்புதிய பயிலகங்களுக்கு அங்கீகாரம் அளிக்க இயலாது. மேலும், அந்தந்தப் பகுதியின் மக்கள் தொகை நெருக்கத்தின் அடிப்படையிலும், வணிகக் கல்வித் தேவையின் அடிப்படையிலும், ஏற்கனவே அங்கீகாரம் பெற்று இயங்கி வரும் பயிலகங்களிலிருந்து 1/4 (கால்) கி.மீ. க்கு மேல் 1/2 (அரை) கி.மீ. இடைவெளிக்குள் புதிதாகத் துவக்கப்படும் பயிலகங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு, தேவை என்று கருதப்பட்டால் மட்டும் அங்கீகாரம் அளிக்கப்படும்.புதிதாகத் துவக்கப்படும் பயிலகம் ஏற்கனவே அங்கீகாரம் பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் பயிலகங்களிலிருந்து 1/2 (அரை) கி.மீ. இடைவெளிக்கு மேலிருந்தால் மற்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அங்கீகாரம் வழங்கப்படும்.

## 11. பயிலக இடமாற்றம்:

ஏற்பளிக்கப் பெற்ற வணிகவியல் பயிலகம் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கு முன்பே இவ்வியக்ககத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

## 12. இயங்கும் பயிலகங்களின் இடமாற்றம்:

ஏற்பளிக்கப் பெற்ற வணிகவியல் பயிலகத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையும், தவிர்க்க முடியாத காரணங்களும் ஏற்படின், ஏற்கனவே, அங்கீகாரம் பெற்று இயங்கி வரும் பயிலகங்களிலிருந்து 1/4 (கால்) கி.மீ. இடைவெளிக்குள் துவக்கப்படக்கூடாது. அவ்வாறு துவக்கப்பட்டால் அப்பயிலகத்திற்கு இடமாற்றம் வழங்க இயலாது. அதுமுன்னரே இயங்கி வரும் பயிலகத்திற்கு நேர் எதிராகவோ, பக்கத்திலோ, வெகு அருகாமையிலோ இருத்தல் கூடாது. மேலும் ஒரு மாவட்ட வரம்பிலிருந்து மற்றொரு மாவட்ட வரம்பிற்கு இடமாற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது.

## 13. அறிவிப்புப் பலகை:

கீழ்க்கண்ட விவரங்கள் அறிவிப்புப் பலகையில் இடம் பெறவேண்டும்.

1. ஆசிரியரின் பெயர் மற்றும் அவர் பயிலகத்தில் பணியாற்றும் நேரம்.
2. பயிலகத்தின் அலுவல் நேரம்.
3. வார விடுமுறை நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்கள்.
4. மாதப் பயிற்சிக் கட்டணம் (பாட வாரியாக)
   (அ) அரசுத் தேர்வுக் கட்டணம்.
   (ஆ) தேர்வு சிறப்புப் பயிற்சி கட்டணம்.
5. பயிலகத்தில் தட்டச்சுப் பொறிகள் வைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் வசதிகள் முதலியவற்றைக் காட்டும் தரை வரைபடம்.
6. ஏற்பளிக்கப்பட்டிருக்கும் பாடங்கள்.
7. பயிற்சி பெறும் மாணவர்களின் பட்டியல்.

## 14. அச்சிட்ட ரசீது வழங்கும் முறை:

மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டண விவரங்கள் அறிவிப்புப் பலகையில் தெளிவாக தெரிவிக்கப்பட வேண்டும். மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணங்களுக்கு கார்பன் பயன்படுத்தக் கூடிய அச்சிட்ட ரசீதுகள் வழங்கப்படல் வேண்டும்.

அந்தந்த ரசீதுகளின் அடிக்கட்டுகள் தணிக்கையின்போது காண்பிக்கப்பட வேண்டும்.

**15. கிளைப் பயிலகங்கள்:**

கிளைப் பயிலகம், ஏற்பளிக்கப்பெறாமல் செயல்படக் கூடாது. ஏற்பளிக்கப் பெறாத கிளைப் பயிலக மாணவர்களை ஏற்கனவே ஏற்பளிக்கப் பெற்றிருக்கிற பயிலகத்தின் மூலம் அரசுத் தேர்வுக்கு அனுப்பப்படக்கூடாது. அதே போல், ஏற்பளிக்கப் பெற்ற எந்தப் பயிலகமும் ஏற்பளிக்கப் பெறாத பயிலகத்தின் மாணவர்களை அரசுத் தேர்வுக்கு அனுப்பக்கூடாது. மீறினால், ஏற்பளிப்பு ரத்து செய்யப்படும்.

**16. செயல்படாப் பயிலகம்:**

பயிலகம் செயல்பட இயலாத போது அது குறித்து இவ்வியக்கத்திற்கு உடனே தெரிவிக்க வேண்டும். அவ்வாறு பயிலகம் மூடப்பட்டால், பயிலகத்திற்குரிய ஏற்பளிப்பு ஆணையை இவ்வியக்கத்திற்குப் பதிவு அஞ்சலில் திருப்பி அனுப்ப வேண்டும்.

பயிலக ஏற்பளிப்பு ரத்து செய்யப்பட்டால், ஏற்பளிப்பு ஆணையினைத் திருப்பி அனுப்பி விட வேண்டும்.

**17. தட்டச்சுப் பொறி மாணவர் விகிதாச்சாரம்:**

பயிலகத்தில் இருக்கும் ஆங்கிலம் மற்றும் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளின் (ஆரம்பப் பயிற்சியாளர்களுக்கான பொறி நீங்கலாக) எண்ணிக்கையும், ஆங்கிலம் மற்றும் தமிழ்த் தட்டெழுத்துத் தேர்விற்கு அப்பயிலகம் வாயிலாக அனுப்பப்படும் மாணவர்களின் எண்ணிக்கையும் ஒரு நிலைக்கு 1:5 என்ற விகிதத்திற்கு மேற்படாதிருத்தல் கவனிக்கப்பட வேண்டும். இவ்வியக்ககத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் தகவலின்படி பயிலகத்திற்கும் தட்டச்சுப்பொறிகளின் எண்ணிக்கையும் தேர்விற்கு அனுப்பப்பட்டிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் கணக்கிடப்படும்போது ஒவ்வொரு பொறிக்கும் ஒரு நிலைக்கு ஐந்து மாணவர்கள் என்ற விகிதத்திற்கு மேற்படுவதாக இருப்பின் அப்பயிலகம் வாயிலாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**18. மாணவர்களின் கல்வித் தகுதி:**

அரசு வணிகவியல் தேர்வுக்குச் செல்ல விரும்பும் மாணவர்கள் அதற்கென வரையறுக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி இல்லாதவராயின் அவர்களைப் பயிலகத்தில் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

**19. அரசுத் தேர்வு:– மாணவர்களுக்கு அவசிய குறைந்த காலப் பயிற்சி:**

வணிகவியல் பயிலகத்தில் குறைந்தது மூன்று மாத கால அளவேனும் பயிற்சி பெறாத மாணவர்கள் அந்தப் பயிலகத்தின் மூலமாகத் தேர்விற்கு அனுப்பப்படுவதைத் தவிர்க்க வேண்டும். பயிலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் மாணவர்கள்

சேர்க்கைப் பதிவேட்டின்படி மேலே கூறப்பட்டுள்ள கால அளவு பயிற்சி இல்லாதவர்கள் அரசுத் தேர்விற்கு அனுப்பப்படக்கூடாது. மேற்கூறப்பட்டவாறு, அப்பயிலகத்தில் பயிற்சி பெறாத மாணவர்களின் பெயர்கள் அப்பயிலகம் வாயிலாகத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்கள் பெயர்ப்பட்டியலில் (நாமினல் ரோல்) சேர்க்கப்பட்டு அவர்கள் அப்பயிலகம் வாயிலாகத் தேர்வு எழுத அனுப்பப்படக்கூடாது. இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, மேலும், இவ்விதியை மீறிய பயிலகத்தின் ஏற்பளிப்பு ரத்து செய்யப்படும்.

**20. அரசுத் தேர்விற்கு முன், வாராந்திரத் தேர்வு:**

வாராந்திரத் தேர்வுகள் நடத்தி, யார் யார் அரசுத் தேர்வுக்குரிய பயிற்சியும் திறமையும் பெற்றுள்ளனர் என்பதைக் கண்டறிந்த பின்னரே, அம்மாணவர்களை அரசுத் தேர்விற்கு அனுப்ப வேண்டும்.

**21. உதவித் தொகை:**

பயிலகத்தில் பயிலும் மாணவர்கட்கு அரிசன நலத் துறையிலிருந்தோ வேறு அரசுத் துறையிலிருந்தோ அரசு உதவித் தொகை அளிக்கப்படின் அம்மாணவர்கட்கு உதவிப் பணத்தை உடனே வழங்கி அப்பணத்தைப் பெற்றுக் கொண்டதற்கான ரசீதினை (Acquittance) அவர்களிடமிருந்து பெற்று அதனைத் தாமதமின்றி சம்பந்தப்பட்ட துறை அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**22. சலுகைகள்:**

ஏற்பளிக்கப் பெற்ற வணிகவியல் பயிலகம் என்ற முறையில் கொடுக்கப்படும் எவ்விதமான சலுகையும் (தயாரிப்பாளரிடமிருந்து தட்டச்சுப் பொறிகள் வாங்குதல், தேர்விற்கான விண்ணப்பப் படிவங்கள் பெறுதல், கடந்த தேர்வு வினாத் தாள்களைப் பெறுதல் முதலியன) தவறுதலாகப் பயன்படுத்தப்படக்கூடாது.

**23. ஆய்வும், மேல் நடவடிக்கையும்:**

இவ்வியக்கக அலுவலரின் முன்னறிவிப்பில்லா ஆய்வின் போது பயிலகத்தின் கல்வித் தரம் தொடர்ந்தார்போல் மிக மோசமாக இருந்தாலோ, அல்லது ஆய்வின் போது பதிவேடுகள் அலுவலரின் பார்வைக்குக் கொடுக்கப்படவில்லை என்றாலோ, அல்லது மேற்கூறப்பட்ட விதிமுறைகள்

சரிவர கடைப்பிடிக்கப்படவில்லை என்று தெரியவந்தாலோ அல்லது ஏற்பளிக்கப் பெறுவதற்கென அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பத்தில் பயிலகத்தில் பணிபுரியும் ஆசிரியர்களின் பெயர்கள், கல்வித் தகுதி முதலிய விவரங்களில் தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டிருந்தாலோ, வழங்கப்பட்டிருக்கும் ஏற்பு ரத்து செய்யப்படும்.

**24. கடிதங்களில் ஏற்பளிப்பு எண் குறிக்கப்பெறுதல்:**
இவ்வியக்ககத்திற்கு அனுப்பப்படும் கடிதங்களில் பயிலக ஏற்பளிப்பு எண் மற்றும் தேர்வு மைய எண்ணைத் தவறாமல் குறிப்பிட வேண்டும். பயிலகத்தின் சரியான முகவரியும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

**25. கையொப்பமிடுபவர் தகுதி:**
இவ்வியக்ககத்திற்கு அனுப்பப்படும் கடிதங்களில் உரிமையாளர் அல்லது உரிமையாளரால் அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் மட்டுமே கையொப்பமிட வேண்டும்.

**26. செயல்முறைத் திட்ட அறிவிப்பு:**
வணிகவியல் சம்பந்தப்பட்ட எந்த அறிவிக்கையும் அரசிதழில் வெளியிடப்பட மாட்டாது. வணிகவியல் தேர்வுகள் நடத்துவது, வணிகவியல் பயிலகங்களுக்கு ஏற்பு அளிப்பது முதலிய விவரங்களைத் தற்காலிக செயல்முறைத் திட்டங்கள் அடங்கிய ஏட்டின் (Tentative Programme) வாயிலாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இருப்பினும், தேவைப்படும் போது, இது பற்றிய விவரங்கள் முன்னணி செய்தித் தாள்களில் அவ்வப் போது அறிவிக்கப்படும்.

**27. தேர்வு மைய மாற்றம்:**
தேர்வு மைய மாற்றம் கோரினால், தேர்வு நடைபெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இவ்வியக்கத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

**28. அரசுத் தேர்வுக்குக் குறைந்த அளவு மாணவர்கள் அனுப்புதல்:**
ஏற்பளிக்கப்பெற்ற பயிலகம் பத்து மாணவர்களுக்குக் குறையாமல் அரசுத் தேர்வுக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு பத்து மாணவர்களுக்கும் குறைவாகத் தொடர்ந்து இரண்டு தேர்வுகளுக்கு அனுப்பினால் அப்பயிலகம் எச்சரிக்கை செய்யப்படும்.

**29. அரசுத் தேர்வுக்கு மாணவர்களை அனுப்பாமை:**
ஏற்பளிக்கப் பெற்ற பயிலகம் தொடர்ந்து இரண்டு தேர்வுகளுக்கு மாணவர்களை அனுப்பாமலிருந்தால் அதன் ஏற்பளிப்பு ரத்து செய்யப்படும்.

**30. ஏற்பளிப்பு ஆணை பார்வைக்கு வைக்கப்படுதல்:**
ஏற்பளிப்பு ஆணை வணிகவியல் பயிலகத்தினுள்ளே நன்கு தெரியும்படி பார்வைக்காக வைக்கப்பட வேண்டும்.

நிரந்தர ஏற்பளிப்பு பெற்ற பயிலகங்கள், அவ்வேற்பளிப்பு பெற்றதற்குப் பிறகு, அவ்வப் போது சேர்க்கப்படுகிற அல்லது விடுபடுகின்ற பாடங்கள் குறித்துத் தேர்வு வாரியம் பிறப்பிக்கும் ஆணை கடிதங்களையும் ஏற்பளிப்பு ஆணையுடன் பார்வைக்கு வைக்க வேண்டும்.

**31. புதுப்பித்தல் / நிரந்தர அங்கீகாரம்:**
புதிய அங்கீகாரம் பெற்ற பயிலகங்கள் தங்களது அங்கீகாரத்தை தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து வந்தால் மட்டுமே நிரந்தர அங்கீகாரம் பெறத் தகுதியினைப் பெறும்.

நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தி புதுப்பித்தல் மற்றும் நிரந்தர அங்கீகார விண்ணப்பங்களை தேர்வு வாரியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். எந்த ஆண்டுக்கு பயிலகத்தின் அங்கீகாரம் புதுப்பிக்க வேண்டுமோ அதற்கு முந்தைய ஆண்டு டிசம்பர் 1ம் தேதிக்குள் அங்கீகாரம் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் தேர்வு வாரியத்திற்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். தாமதத்திற்கு அளிக்கப்படும் எவ்வித விளக்கங்களும் ஏற்கப்பட மாட்டாது. பயிலகம், நிரந்தர அங்கீகாரம் பெற்ற பின்னரும் அங்கீகாரம் வழங்குவதற்கு தேர்வு வாரியம் நிர்ணயித்து உள்ள நிபந்தனைகளை தவறாமல் கடைபிடித்து வரவேண்டும்.

**32. புதிய பயிலகங்களுக்கு இடமாற்றம் / உரிமையாளர் மாற்றம்:**
புதியதாக அங்கீகாரம் பெற்ற பயிலகங்கள் அங்கீகாரம் பெற்ற **ஓராண்டுக்குள் இடமாற்றம் (அ) உரிமையாளர் மாற்றம் கோரல் கூடாது.**

**33. பொது:**
விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் முறையாக சரியான பதில் / விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும். எந்த ஒரு வினாவும் பதில் அளிக்கப்படாமல் விடப்படுதல் கூடாது. ஏதேனும் வினாவிற்கு அளிக்கப்பட வேண்டிய விவரங்கள் ஏதுமில்லை என்றால் இல்லை, ஆம் என்ற வார்த்தைகளால் மட்டுமே பதிலளிக்க வேண்டும்.

**தலைவர்**
**தேர்வு வாரியம், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்**
**சென்னை – 600 025.**

உரிமையாளர்
புகைப்படம்

தேர்வு வாரியம்

# தொழில் நுட்ப கல்வித் துறை

**சென்னை – 600 025**

## வணிகவியல் பயிலகங்கள் புதிய அங்கீகாரம் கோரும் விண்ணப்பப் படிவம்-2021

(குறிப்பு : விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் விளக்கவுரையினைப் படித்த பின்னர் பூர்த்தி செய்த விண்ணப்பத்தின் இரு நகலினை தேர்வு வாரியத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மற்றொரு நகலினை பயிலகத்தில் வைத்திருந்து ஆய்வுக்கு வரும்போது காண்பிக்க வேண்டும். )

1. வணிகவியல் பயிலகத்தின் பெயர் முழு அஞ்சல் முகவரி ( Pin Code ) மற்றும் தொலைபேசி / இருப்பின் அதன் எண் / மின்னஞ்சல் :

2. உரிமையாளர் / உரிமையாளர்களின் பெயர் மற்றும் இருப்பிட முகவரி :

3. உரிமையாளரின் ஆதார் எண் (நகல் இணைக்கவும்) :

4. பயிலகம் இயங்கும் கட்டடம் பயிலக உரிமையாளருக்குச் சொந்தமானதா ? வாடகைக் கட்டடமா ? :

   (அ) சொந்தமான கட்டடம் எனில் அக்கட்டடத்தின் வரி கட்டிய இரசீது இணைக்கவும்/ வாடகை கட்டடம் எனில் வாடகை ஒப்பந்த நகல் இணைக்கவும் :

5. பயிலகத்தின் தரைப் பரப்பளவு (சதுரமீட்டரில்) :

6. கட்டடம் உறுதியாகவும், பாதுகாப்பாகவும் உள்ளதா ? :

7. கட்டடம் காற்றோட்டமுள்ளதாய் உள்ளதா ? :

8. முதல் உதவி பெட்டி உள்ளதா ? :

9. கட்டடத்திற்கு மின் இணைப்பு உள்ளதா ? :

10. வகுப்பறைகளுக்கு மின் விளக்கு, மின்விசிறி பொருத்தப்பட்டுள்ளதா ? :

11. பயிலகத்தில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதா ? :

12. கட்டடத்தில் கழிவறை வசதிகள் உள்ளனவா ?

13. துவக்கப்படவுள்ள பயிலகம் எற்கனவே அங்கீகாரம் பெற்று இயங்கி வரும் பயிலகங்களிலிருந்து 1/4 கிமீ இடைவெளிக்குள் உள்ளதா ? :

14. அருகாமையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட வணிகவியல் பயிலகங்களுக்கு பாதிப்பு உண்டா ? :

15. பயிலகத்தின் வேலை நேரம் :

வாராந்திர விடுமுறை நாட்கள் :

16. அங்கீகாரத்திற்காக விண்ணப்பித்துக் கொள்ளப்படும் பாடக் குறியீட்டு எண்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

அ) சுருக்கெழுத்து பாடங்கள் கற்பிக்கப்படும் தனி வகுப்பறை பற்றிய விவரம் குறிப்பிடவும் :
(சுருக்கெழுத்து பாடம் கற்பிக்க அங்கீகாரம் தேவையெனில் )

17. அங்கீகாரத்திற்கான நிபந்தனைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா ?
( விளக்கவுரையிலுள்ள நிபந்தனைகள் ) :

18. தங்கள்பயிலகம் அமைந்துள்ள இடத்தின் (Google) வரைப்படம் (Latitude/Longitude) எண்கள் அடங்கிய நகல் இணைக்கப்பட்டுள்ளதா ? :

19. பயிலகத்தில் ஆசிரியராகப் பணிபுரிவோர் பற்றிய விவரங்கள்

| வ. எண் | பெயர் | கல்வித் தகுதி | | தொழில் நுணுக்க பாடத்தின் பாடங்களின் குறியீட்டு எண்கள் | தொழில் நுணுக்க ஆசிரியர் பயிற்சியில் தேறியவரா (TTC) ? | பாடங்களை போதிப்பதில் அவருடைய அனுபவ காலம் | பணி புரியும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | பொது | தொழில்நுட்ப கல்வித் தகுதி | | | | |
| | | | | | | | |

20. தொழில்நுட்பக் கல்வி தகுதி முடித்தவரின்
(அ) பெயர் / இருப்பிட முகவரி :

(ஆ) தொழில்நுட்பக் கல்வி சான்றிதழின் எண். ( நகல் இணைக்கவும்) :

(இ) தொழில்நுட்பக் கல்வி தகுதி முடித்தவரின் ஆதார் எண், நகல், புகைப்படம் இணைக்கவும் :

21. உரிமையாளரோ / முதல்வரோ / மேலாளரோ அல்லது ஆசிரியர்களில் எவரேனுமோ இப்பயிலகத்தைத் தவிர்த்து வேறு பயிலகங்களில் பணி புரிகிறார்களா ? அவ்வாறாயின், அப்பயிலகத்தின் அங்கீகார எண், பெயர், வேலை செய்யும் நேரம் முதலிய விவரங்கள் அளிக்க வேண்டும் :

22 பயிலகத்தில் பணிபுரியும் ஆசிரியர் / ஆசிரியர்கள் ஒவ்வொருவரிடமுமிருந்து தனித்தாளில் விளக்கவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள படிவம் 'அ' வில் கூறப்பட்டுள்ளதைப் போல் உறுதிமொழி சான்று தனியாக தட்டச்சுச் செய்து இணைக்கப்பட வேண்டும். உரிமையாளரோ / முதல்வரோ ஆசிரியர்களில் எவரேனும் அரசு / அரசு போன்ற உள்ளாட்சி மன்ற அலுவலகங்களில் பணிபுரிகிறவர்களாயின் சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து முன் அனுமதி நடப்பு ஆண்டுக்கு வாங்கப்பட்டுள்ளதா ? (அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பம் அளிக்கப்பட்ட அனுமதி கடிதத்தின் / கடிதங்களின் நகல் (கள்) இணைக்கப்படவேண்டும்.)

23 (அ) பயிலகத்தில் உள்ள தட்டச்சு பொறிகளின் மற்றும் கணிப்பொறிகளின் எண்ணிக்கை

| ஆங்கிலம் | தமிழ் | கணிப்பொறிகள் |
|---|---|---|
| | | |

(ஆ) தட்டச்சு பொறிகளின் மாதிரி, தட்டச்சு பிரதிகள், வரிசை எண், தயாரிப்பு முதலியன இணைக்கப்பட்டடுள்ளதா ? :

(இ) கணிப்பொறிகளின் (எண், வடிவம் மற்றும் விவரக் குறிப்பு (Specification) :

24. மாணாக்கர்களிடமிருந்து மாதந்தோறும் வசூலிக்கப்படும் கட்டண முழு விவரம் :

(அ) மாணாக்கர்களிடமிருந்து தேர்விற்காக வசூலிக்கப்படும் தனிக்கட்டணம் உள்பட கட்டண விவரம் :

(ஆ) மாணாக்கர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்திற்கு ரசீது வழங்கப்பட வேண்டிய முறை பின்பற்றப்படுகிறதா ? :
(அச்சிட்ட ரசீது வழங்கப்பட வேண்டும்)

25. பயிலகத்தின் அருகாமையிலுள்ள வணிகவியல் தேர்வு மையத்தின் பெயர் :

26. பயிலகம் எந்த கல்வி மாவட்ட வரம்பில் இயங்கி வருகிறது :

27. அங்கீகாரக் கட்டணம் செலுத்தப்பட்ட விவரங்கள் :

(அ) செலுத்தப்பட்ட தொகை, தொகை செலுத்தப்பட்ட வங்கி பெயர், இடம் மற்றும் தொகை செலுத்திய நாள் :

இடம் :
நாள் :

உரிமையாளர் / உரிமையளர்களின் கையொப்பம்
( பயிலக முத்திரையுடன் )

பயிலகத்தின் பெயர் மற்றும் முகவரி :

**உரிமையாளரின் / உரிமையாளர்களின் உறுதி மொழி**

**(பொருந்தாத வார்த்தைகள் அடிக்கப்பட வேண்டும்)**

என்னால் / எங்களால் இந்த விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு / எங்களுக்கு முழுமையாக தெரிந்த அளவில் சரியானவை என்றும், எனது / எங்களது நிலையத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படுமாயின் நான் / நாங்கள் தேர்வு வாரியத் தலைவரின் அவ்வப்போதைய சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன் / நடப்போம் என்றும் உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம்.

என்னால் / எங்களால் தவறான தகவல்கள் தரப்பட்டிருந்தாலோ ஏற்பு நிபந்தனை விதிகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ தேர்வு வாரியத் தலைவரால் எடுக்கப்படும் தகுந்த நடவடிக்கைகளை நான் / நாங்கள் ஏற்றுக் கொள்வேன் / கொள்கிறோம்.

ஆசிரியர்கள் எவரேனும் விலகினாலோ, அவருக்குப் பதிலாக அல்லது கூடுதலாகவோ ஆசிரியர்(கள்) நியமனம் செய்யப்பட்டாரோ, அம்மாற்றம் குறித்துக் தேர்வு வாரியத் தலைவருக்கு உடனுக்குடன் தெரிவிப்பதோடல்லாமல் பதிலாக அல்லது கூடுதலாக நியமனம் செய்யப்படும் ஆசிரியரின் / ஆசிரியர்களின் தொழில் கல்விச் சான்றிதழ்களின் உண்மை நகல்களையும் அனுப்புகிறேன் / அனுப்புகிறோம்.

அங்கீகார ஆணையுடன் இணைக்கப்படும் விளக்கவுரையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் / நடப்போம் என்றும், அந்த நிபந்தனைகளை செயல்படுத்துவதில் குறைபாடுகள் ஏதேனும் காணப்பட்டால் தேர்வு வாரியத் தலைவரால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்வேன் / கொள்கிறோம் என்றும் உறுதியளிக்கின்றேன் / உறுதியளிக்கின்றோம்.

இடம் :

நாள் : உரிமையாளர் / உரிமையாளர்களின் கையொப்பம்

( பயிலக முத்திரையுடன் )

பயிலக முத்திரை

---

குறிப்பு : உரிமையாளர் / உரிமையாளர்கள் மட்டும் தான் கையொப்பமிட வேண்டும்.

# மாதிரிப் படிவம்

## படிவம் ‘அ’

1, ---------------------- என்ற பெயருடைய நான் ----------------- ல் 20 ----------- ஆம் ஆண்டு -------------------- மாதம் ----------------- ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து ஊதியம் பெறும் / கௌரவ/ முழு நேர / பகுதி நேரஆசிரியராக / முதல்வராக / மேலாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், என்னுடைய தற்போதைய மேற்கூறப்பட்ட பதவியில் மாற்றம் ஏற்படின் உடனடியாக தேர்வு வாரியத் தலைவருக்கு தகவல் தெரிவிப்பேன் என்றும், தெரிவிக்காத காலத்து ஏற்படும் பின் விளைவுகளுக்கு நானும் பொறுப்பாளியாவேன் என்றும், உறுதி கூறுகிறேன்.

2. நான் அரசு / அரசு போன்ற உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் எதிலும் பணிபுரியவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

3. நான் அரசு / அரசு போன்ற உள்ளாட்சித் துறை ஊழியராகப் பணிபுரிவதால் இப்பகுதி நேரப் பணியை ஏற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து அனுமதி பெற்று அவ்வனுமதி கடிதத்தின் உண்மை நகல் ஒன்றை தேர்வுவாரியத் தலைவரின் பார்வைக்கு அனுப்ப உரிமையாளரிடம் கொடுத்துள்ளேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு முகவரி:

கையொப்பம் மற்றும் தேதி

---

குறிப்பு: பொருந்தாத பத்தியும், வார்த்தைகளும், அடிக்கப்படுவதோடு பத்தி **3** – ல் உண்டென்றால் உரிய அனுமதிக் கடிதம் இணைக்கப்பட வேண்டும். அரசு ஆணை நிலை எண். 893, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்த பணி (ஏ) துறை, நாள்22 -9-1983-ல் அரசு ஊழியர் பகுதி நேரப் பணிபுரிய தடை விதிக்கப்பட்டுள்ளது.

## நிலைத்த படிவம்

(உரிமையாளரால் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்)

1. அங்கீகார எண் :
(தேர்வு வாரியத்தால் அளிக்கப்படும்)

2. (அ) வணிகக்கல்வி பயிலகத்தின் பெயர் :
அஞ்சல் முகவரி (Pin Code)

(ஆ) உரிமையாளர் / உரிமையாளர்களின் பெயர்
அவரது அவர்களது இருப்பிட முகவரி :

3. தொலைபேசி எண் : பயிலகம் :

இருப்பிடம் :

மின்னஞ்சல் :

4. பயிலகத்தின் வேலை நேரம் :

5. பயிலகத்தின் ஆசிரியராகப் பணிபுரிவோர் பற்றிய விவரங்கள் :

| வ. எண் | ஆசிரியர்களின் பெயர் | தேர்ச்சி பெற்றுள்ள தொழிற்கல்வி பாடங்கள் | தேர்ச்சி பெற்ற மாதம், வருடம் | இப்பணியில் சேர்ந்த தேதி | ‘அ‘ படிவம் இணைக்கப்பட்டுள்ளதா ? | பணிபுரியும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

6. தற்போது அங்கீகாரத்திற்காக விண்ணப்பித்துள்ள பாடங்களின் குறியீட்டு எண்கள் :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

7. (அ) பயிலகத்திலுள்ள ஆங்கில தட்டச்சு பொறிகளின் எண்ணிக்கை :

(ஆ) தமிழ் தட்டச்சுப் பொறிகளின் எண்ணிக்கை :

(இ) கணிப்பொறிகளின் எண்ணிக்கை :

8. வசூலிக்கப்படும் கட்டணங்களுக்கு அச்சிடப்பட்ட ரசீது வழங்கப்படுகிறதா ? :

9. பயிலக பராமரிப்புக்குத் தேவையான பதிவேடுகள் பேணப்படுகின்றனவா ? :

10. பயிலகம் தீ பிடிக்காத, பாதுகாப்பான, நிரந்தர கட்டிடத்தில் இயங்குகிறதா ? :

11. வகுப்பிற்குத் தேவையான மேஜை, நாற்காலி, ஸ்டூல் போன்ற தளவாடங்கள் போதிய அளவில் உள்ளனவா ? :

12. தங்கள் பயிலகம் உள்ள இடத்திலிருந்து 1/2 கி.மீ இடைவெளிக்கு குறைவாக வேறு பயிலகம் ஏதேனும் இயங்கி வருகிறதா ? ஆம் எனில் அப்பயிலகத்தின் பெயர் மற்றும் அங்கீகார எண் :

13. இப்பயிலகம் ஏற்படுவதால் அருகாமையில் உள்ள அங்கீகரிகப்பட்ட பயிலகங்களுக்கு பாதிப்பு ஏற்படுமா ? :

14. தங்கள் பயிலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள வணிகவியல் தேர்வு மையத்தின் பெயர் என்ன ? :

15. அருகிலுள்ள பாலிடெக்னிக் கல்லூரியின் பெயர் / ஊர் / தொலைவு :

இடம் :

நாள் :

உரிமையாளர் / உரிமையளர்களின் கையொப்பம்